**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 214 of 2024

DATE : 17.02.2026

Depositions of witness for Prosecution

PW : 4

| Name | மாரிமுத்து | Caste | |
|---|---|---|---|
| Father/Husband's Name | ஆறுமுகம் | Calling | தோட்டக்கலை உதவி இயக்குநர் (ஓய்வு) |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17 th day of February 2026

**(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திரு குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் தமிழ்நாடு தோட்டக்கலைத்துறையில் உதவி இயக்குனராக பணிபுரிந்து தற்பொழுது விருப்ப ஓய்வில் இருந்து வருகிறேன். இதற்கு முன்பு வத்திராயிருப்பு தோட்டக்கலை உதவி இயக்குனராக பணிபுரிந்த பொழுது, கடந்த 04.12.2017 அன்று வத்திராயிருப்பு சார்பு ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சம்பவ இடத்தை பார்வையிட்டு அதற்காக சேதமதிப்புச் சான்றிதழை வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் சேதம் மதிப்பு சான்றிதழ் நான் கொடுத்தது தான். **சேதம் மதிப்பு சான்றிதழ் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

நான் கொடுத்த அறிக்கையில் வாழை மரங்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் வாழை கன்றுகளும் அதில் அடங்கும். பொதுவாக ஒரு வாழைமரம் முழுமையாக வளர்ச்சி அடைய எடுத்துக் கொள்ளும் காலம் எவ்வளவு

என்றால் சுமார் 10 முதல் 12 மாதங்கள் ஆகலாம். நான் சம்பவ இடத்தை சென்று பார்வையிடும் பொழுது அங்கு சேதம் அடைந்ததாக சொல்லப்படுகின்ற வாழை மரங்களின் வளர்ச்சி காலம் என்ன என்றால் சுமார் இரண்டு மாதங்கள் இருக்கும். அப்படி என்றால் அது வாழை கன்று என்று சொன்னால் சரிதான். நான் சொல்வது போல சம்பவ இடத்தை சென்று பார்வையிட வில்லை என்றும் நான் சொல்வது போல சென்று பார்வையிட்டிருந்தால் நான் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் சேதமதிப்பு சான்றிதழை வாழைமரம் மற்றும் வாழை கன்றுகள் என்று முரண்பட்டு சொல்லியிருக்க மாட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

300 வாழை மரங்கள் சேதம் அடைந்ததாக சொல்லியுள்ள நிலையில், வாழை மரங்கள் என்ன வகையில் சேதம் அடைந்து காணப்பட்டது என்று என்னுடைய அறிக்கையில் நான் சொல்லவில்லை என்று சொன்னால், நடுகுருத்து காணப்படாமல் வாழை மரங்கள் சேதமடைந்து காணப்பட்டது. மாடுகள் மேய்ந்து சேதப்படுத்திய நிலையில் காணப்பட்டது. சேதங்களை காண்பிக்க புகைப்படங்கள் எதுவும் சம்பவ இடத்திலிருந்து எடுத்து நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் சென்றதாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சேதத்தின் தன்மை குறித்து நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரணையின் பொழுது சேதத்தின் தன்மை குறித்து நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். காவல் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்காக ஒரு அறிக்கை தயார் செய்து அதற்காக நான் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 214 of 2024

DATE : 17.02.2026

Depositions of witness for Prosecution

PW : 5

| | | | |
|---|---|---|---|
| Name | சன்னாசி | Caste | |
| Father/Husband's Name | ஆவுடையப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17 th day of February 2026

**(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திரு குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் வத்திராயிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் குடிசைகள் கட்டும் தொழில் செய்து வருகிறேன். சுமார் 9 வருடங்களுக்கு முன்பு தேதி மற்றும் மாதம் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்திற்கு சென்று அங்கு சேதம் அடைந்திருந்த குடிசையினை பார்வையிட்டு, அதில் ஏற்பட்டிருந்த சேதத்திற்காக சேதம் மதிப்பு சான்றிதழ் வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் சேதம் மதிப்பு சான்றிதழ் நான் வழங்கியதுதான். **சேத மதிப்பு சான்றிதழ் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு சாட்சியை**

**குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. அனுமதியின்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை : –**

கடந்த 04.12.2017 அன்று வத்திராயிருப்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, சம்பவ இடத்தை பார்வையிட்டு, சேதத்தை மதிப்பீடு செய்த சேத மதிப்பு சான்றிதழ் தயார் செய்து வழங்கினேன் என்றும், இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : – இல்லை**

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 214 of 2024

DATE : 17.02.2026

Depositions of witness for Prosecution

PW : 6

| | | | |
|---|---|---|---|
| Name | பாஸ்கர் | Caste | |
| Father/Husband's Name | முத்தையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17 th day of February 2026

**(எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் திரு குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது விருதுநகர் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வத்திராயிருப்பு சார்பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணியில் இருந்த பொழுது, வத்திராயிருப்பு வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று, அவர் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை பார்வையிட்டு வத்திராயிருப்பு கிராம சர்வே எண் 585 க்கான வில்லங்கச் சான்றிதழை சமர்ப்பித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் அறிக்கை மற்றும் வில்லங்கச் சான்றிதழ் அசல் நான் கொடுத்தது தான். **அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –**

நான் வில்லங்கச் சான்றிதழ் கொடுக்கும்பொழுது, அந்த சர்வே எண் தொடர்பான வருவாய் துறை ஆவணங்கள் எதையும் வரவைத்து பார்வையிட்டு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்குக்காக காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு